ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1875 - 2014 අගෝස්තු 08 වැනි සිකුරාදා - 2014.08.08

1875 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (III) - வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | - | ஆக்க உரிமைகள் பற்றிய அறிவித்தல்கள் | 346 |
| வியாபார உரிமை அடையாள அறிவித்தல்கள் | - | தொழிலக வடிவ அமைப்புகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |

***கவனிக்க.***– சத்மெச்சித்ஹவுல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2014, யூலை 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.

***கவனிக்க.***– இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர்கள் மற்றும் பிரசுரிப்பாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 2012 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மார்ச்சு) அச்சிடப்பட்டுள்ள புத்தகப் பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப் பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2014, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்க்கப்பட வேண்டும்.

***பீ. எச். எல். வீ. டீ. சில்வா***
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங் களும் ஆக்கவுரிமைகள் வியாபாரக்குறிகள் பதிவாளர், ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம், 'சமாகம் மெதுற', 3 ஆம் மாடி, இல. 400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 2.30 மணி வரையும் திறந்திருக்கும் எனினும் பரிசோதனைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்றும் விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கப் புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டம் 112 ஆம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### எதிர்ப்பு

பின்வரும் வியாபாரச் சேவை அல்லது கூட்டுக் குறிகள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ரூபா 750 காசாகவோ, காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ, அஞ்சற் கட்டளையாகவோ அல்லது வங்கி வரைவாகவோ செலுத்தி எம் 2 பத்திரத்தில் (அதற்கான இணைப்புப் பிரதியுடன்) எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

# ஆக்கவுரிமைகள் பற்றிய அறிவித்தல்கள்

## 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டம்

(பிரிவு 79 (2)(பி) )

பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுவது யாதெனில், இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாதம் முடிவடைந்ததன் பின்பு பின்வரும் விண்ணப்பதாரர்களுக்கு ஆக்கவுரிமை வழங்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதாகும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | (1) விண்ணப்ப இல: 15852; | (2) விண்ணப்பதாரர்;யுனிவர்சிட்டி புத்ரா மலேசியா | (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: சுத்தமான தேங்காய் எண்ணெய் தயாரிப்பதற்கான முறைகள், சமையல் எண்ணெய் மற்றும் தேங்காயிலான உயிரியல் டீசல் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள்: |
| (2) | (1) விண்ணப்ப இல: 16100; | (2) விண்ணப்பதாரர்;விபுல தர்மதாஸ; | (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: கல் உடைப்பதற்கான கருவியும் முறையும்; |
| (3) | (1) விண்ணப்ப இல: 16195; | (2) விண்ணப்பதாரர்;குரும்பலபிட்டி ஆரச்சிகே தம்மிக்க குரும்பலபிட்டிய ஜய அபேசிங்ஹ குணவர்த்ன; | (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: கல் உடைப்பதற்கான கருவியும் முறையும்; |
| (4) | (1) விண்ணப்ப இல: 16248; | (2) விண்ணப்பதாரர்;ஜகத் பாலித வித்யாரத்ன; | (3) கண்டுபிடிப்பின் தலைப்பு:கணினியிலிருந்து ஓடியோ சிஸ்டத்திற்கான ஹை-பை தந்தியற்ற இணைப்பான்; |
| (5) | (1) விண்ணப்ப இல: 16782; | (2) விண்ணப்பதாரர்;பஹல கமகே கருணா திஸ்ஸ; | (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: இறப்பர் பால் எடுக்கும் செயன்முறையின் போது இறப்பர் பால் வெட்டு மற்றும் வெட்டப்பட்ட வெட்டு என்பனவற்றை மழையிலிருந்து பாதுகாப்பதற்கான முறைமை; |

(6) (1) விண்ணப்ப இல: 16985; (2) விண்ணப்பதாரர்;கொடகொட விதானகே நதீகா உதயகந்த மெத்தாநந்த; (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: இரசாயண வளி உயிர் பாதுகாப்பு பலூன்;

(7) (1) விண்ணப்ப இல: 17115; (2) விண்ணப்பதாரர்;வீரசிங்ஹ முதியன்சேலாகே நிசாந்த நந்தன வீரசிங்ஹ; (3) கண்டுபிடிப்பின் தலைப்பு: கேவீஏ கட்டுப்படுத்தி;

(8) (1) விண்ணப்ப இல: 17522; (2) விண்ணப்பதாரர்;எம்.பீ.ஆர். மல்லவ(3) கண்டுபிடிப்பின் தலைப்பு: எரிபொருள ற்ற திரவத் தள்ளுகை இயந்திரம்.

8-358

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது